# ரூ.375 கோடியில் தடுப்பணைகள்! ரூ.338 கோடியில் வெள்ள மேலாண்மைப் பணிகள் !

# ரூ.131 கோடியில் வெள்ளத் தடுப்புப் பணிகள் ! ரூ.130.80 கோடியில் தரைப் பாலங்கள் - பாலங்கள் !

## பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்ட மகத்தான அறிவிப்புகள் !

**சென்னை,மார்ச் 26- சட்டப் பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்ட மகத்தான அறிவிப்புகள் வருமாறு:**

**அறிவிப்புகள்**

**நீர்வளத் துறை**

1. தமிழ்நாட்டின் நீர்வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தும்பொருட்டு உருவாக்கப்பட்ட நீர்வளத் துறைக்கு சென்னையில் நவீன வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த கூடுதல் அலுவலகக் கட்டடம் அமைக்கும் பணிக்கு தலைவர் அவர்கள் அனுமதித்திருக் கிறார்கள் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
2. முக்கிய ஆறுகளில் வெள்ளக் காலங்களில் கிடைக்கும் நீரை சேமித்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், வெள்ளநீரின் தீவிரத்தை கட்டுப்படுத்தவும், 15 மாவட்டங்களில், 21 இடங்களில் தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 374 கோடியே 95 இலட்சம் தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.
3. 8 மாவட்டங்களில், 9 இடங்களில் அணைக்கட்டுகள் அமைக்கும் பணி ரூபாய் 184 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
4. 4 மாவட்டங்களில், 4 இடங்களில் ஆறுகளின் குறுக்கே புதிய நீரொழுங்கிகள் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
5. மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
6. மயிலாடுதுறை மற்றும் திருச்சி மாவட்டங்களில், 2 இடங்களில், படுகை அணை மற்றும் தள மட்டச் சுவர் அமைக்கும் பணிக்கு 3 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
7. மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு கீழ்க்குமிழி அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
8. பாசன நிலங்களை எளிதில் சென்றடைய ஆறுகளின் குறுக்கே 8 மாவட்டங்களில், 17 இடங்களில், பாலங்கள் மற்றும் தரை பாலங்கள் அமைக்கும் பணிக்காக ரூபாய் 130 கோடியே 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
9. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில், முன்னாள் ஜமீன் கண்மாய்களான 14 குறு பாசன கண்மாய்களைத் தரப்படுத்தும் பணிக்கு ரூபாய் 9 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.
10. கன்னியாகுமரி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 5 இடங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மற்றும் கடற்கரை பாதுகாப்புப் பணிகளுக்கான “கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி” பெறுவதற்கான முதற்கட்ட பணிக்கு ரூபாய் 1 கோடியே



34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், 35 மாவட்டங்களில் உள்ள பழுதடைந்துள்ள 149 பாசன அமைப்புகளில் புனரமைப்பிற்காக ரூபாய் 722 கோடியே 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
12. அணைகள் மற்றும் அணை பகுதிகளில் உள்ள கட்டுமானங்களைப் பழுதுப்பார்த்தல், பராமரித்தல், புதுப்பித்தல் பணிகள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிகள் 6 மாவட்டங்களில் 13 இடங்களில் ரூபாய் 19 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
13. அணைகள் மற்றும் கதவணைகளின் கதவுகளை பழுதுப்பார்த்தல், அணையின் பிற பழுதுகளைச் சரிப்பார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் 11 மாவட்டங்களில், 16 இடங்களில், ரூபாய் 149 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
14. 11 மாவட்டங்களில், 48 இடங்களில் நீரொழுங்கிகள் மற்றும் மதகுகளில் உள்ள கதவுகளைப் பழுதுப்பார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் ரூபாய் 21 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
15. 7 மாவட்டங்களில், 11 இடங்களில் வெள்ளத் தடுப்பு பணிகள் ரூபாய் 131 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
16. செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
17. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், பெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட திருக்கோவிலூர் அணைக்கட்டினை புனரமைத்து, சீரமைக்கும் பணி ரூபாய் 130 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
18. சென்னை மற்றும் அதன் புற மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தீவிர வெள்ள தணிப்புக்கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணிகள் ரூபாய் 338 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**கோரிக்கை எண் 55 –**

**இயற்கை வளங்கள் துறை**

(1) தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959-ஐ மறுஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை பரிந்துரைப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படும்.

(2) புவிசார் பாரம்பரிய இடம் ஒன்று விழுப்புரம் மாவட்டத்தில், ரூபாய் 5 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும்.

(3) புவியியல் மற்றும் சுரங்கத் துறையில், கனிம மேலாண்மை அமைப்பைக் கையாளும் வகையில், ஒரு திட்ட மேலாண்மை அலகு ஒன்று ஏற்படுத்தப்படும்.

(4) மாநில கனிம ஆய்வு அறக்கட்டளை ரூபாய் 1 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

(5) திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூபாய் 37.50 இலட்சம் செலவில் இரண்டு புவி தொழில்நுட்ப மையங்கள் அமைக்கப்படும்.

(6) 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை குடிநீர்த்தேக்கத் தொட்டி, ரூபாய் 19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

(7) சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் ரூபாய் 14 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

(8) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில், ஒருங்கிணைந்த வணிக மேலாண்மை மென்பொருள் தொகுப்பு (Integrated Enterprise Resource Plan (ERP) ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்.

## பொது அமைதி, மத நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தும்

# எந்தவொரு போராட்டத்திற்கும் காவல்துறை அனுமதி வழங்கக்கூடாது!

## திருப்பரங்குன்றம் மலைச் சம்பவம் குறித்து உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

**புதுடெல்லி, மார்ச் 26 - பொது அமைதி, மத நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த ஒரு போராட்டத்திற்கும் காவல்துறை அனுமதி வழங்கக் கூடாது என்கிற நீதிபதி இளந்திரையனின் உத்தரவில் தலையிட முடியாது என்று உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.**

பாரத் இந்து முன்னணி அமைப்பின் வட சென்னை மாவட்ட துணை தலைவர் எஸ் யுவராஜ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், மதுரை மாவட்டத்தில் இருக்க கூடிய திருப்பரங்குன்றம் மலை முருகப்பெருமானின் மலை அதனை இஸ்லாமியர்கள் சொந்தம் கொண்டாடி வருவதை எதிர்த்து அந்த மலையை காக்க வேண்டும் என்ற கோரிக்கை யுடன் சென்னை ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் இருந்து கந்தகோட்டம் முருகன் கோவில் வரை பிப்ரவரி 18ம் தேதி வேல் பேரணி நடத்த அனுமதி யளிக்க காவல்துறை உத்தரவிடவேண்டும் என கேட்டிருந்தார். இந்த மனு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தது.

**அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வாதம்!**

அப்போது, அரசு தரப்பில் மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆஜராகி, “ஏற்கனவே திருப்பரங்குன்றம் உரிமை குறித்து பிரிவியூ கவுன்சில் வரை சென்று சிக்கந்தர் தர்கா, கொடி மரம், மலைவழிபாதை, நெல்லித்தோப்பு இஸ்லாமியர்களுக்கு சொந்தம் என்று முடிவு செய்யப்பட்ட பிறகு மீண்டும் அது குறித்து பிரச்சினை எழுப்புவது சரியல்ல. பேரணி பாதை போக்குவரத்து நெருக்கடி நிறைந்த சாலை என்கிற காரணம் மட்டுமின்றி வேறு எந்த இடத்தில் பேரணிக்கு அனுமதி வழங்கினாலும் அது தேவையற்ற விரும்பதகாத பிரச்சனைகளை உருவாக்கும். ஏற்கனவே மதுரையில் இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். மீண்டும் அதே பிரச்சனைக்காக பேரணி நடத்துவதை நீதிமன்றம் ஊக்குவிக்க கூடாது” என்றார் சென்னையில் மட்டுமல்ல வேறு எங்கும் போராட்டம் நடத்த அனுமதிக்க கூடாது எனும் கேட்டுக் கொண்டார்.

**உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவு!**

இந்த வழக்கில் தீர்ப்பு அளித்த நீதிபதி, “இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்து சுதந்திரத்தை ஒரு குறிப்பிட்ட மதத்தை சார்ந்த போராட்டக்காரர்கள் நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒரு



மைப்பட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் தவறாக பயன்படுத்த முடியாது” எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுரையில் நடந்த போராட்டத்தின் போது, கலவரத்தை தூண்டும் வகையில் செயல்பட்டதற்காக இரண்டு வழக்குகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் இரு பிரிவினருக்கிடையே விரோதத்தை ஏற்படுத்தி மத நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தி பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டது என உத்தரவில் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையில் நடந்த சம்பவம் தொடர்பாக அனைத்து மதத்தினருக்கு இடையிலான பிரச்சினைகள் வருவாய் கோட்டாட்சியர் முன் பேச்சு வார்த்தை நடத்தி சுமுக தீர்வு காணப்பட்டது. இது தொடர்பான தீர்மானத்தை மதுரை ஆட்சியரும் ஏற்று கொண்டு உள்ளார். அதனால் திருப்பரங்குன்றம் மலையில் நடந்த சம்பவத்தை கண்டித்து போராட்டம் நடத்த எந்த அவசியமும் இல்லை. அப்படி போராட்டம் நடத்தினால் அது மற்ற மதத்தினரை மீண்டும் தூண்ட செய்து பொது அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொது அமைதி, மத நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த ஒரு போராட்டத்திற்கும் காவல்துறை அனுமதி வழங்க கூடாது. மத ரீதியிலான பதட்டங்களை தணிக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து பொது ஒழுங்கையும், மத நல்லிணக்கத்தையும் மீட்டெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையில் இது வரை இந்து, முஸ்லீம், மற்றும் ஜெயின் மக்கள் அமைதியாக வசித்து வந்துள்ளனர். ஒற்றுமையில் வேற்றுமை தான் நம் நாட்டின் பலம். அதனால் அனைத்து மத மற்றும் சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை அரசு பேண வேண்டும். மத நம்பிக்கைகளும், உணர்வுகளும் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். அமைதி, மற்றும் மத நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் எவரையும் செயல்பட அனுமதிக்க கூடாது. இந்த வேல் யாத்திரைக்கு அனுமதி வழங்க கூடாது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி, கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்த எந்த தடையும் இல்லையென்றும் உத்தரவில் தெரிவித்திருந்தார்.

**உயர்நீதிமன்ற உத்தரவில் தலையிட முடியாது!**

இந்த உத்தரவை எதிர்த்து யுவராஜ் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தார். அந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் பீலா திரிவேதி மற்றும் பிரசன்னா வார்லே ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவு சரியாக பரிசீலிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது எனவே அந்த உத்தரவில் தலையிட முடியாது எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.